தேதி.01.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

MCOP. No. 29/2020 திரு.தாயம்மாள், த/பெ.மணி ம.சா. 1

<u>ம.சா.1:சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி :</u>

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

26.11.2019ம் தேதியிட்ட சத்தியமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.642/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 26.11.2019ம் தேதியிட்ட சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.642/2019 வழக்கின் மாதிரி வரைபடம் இணையதள நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 25.11.2019ம் தேதியிட்ட தாயம்மாளின் விபத்து பதிவேடு இணையதள நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 20.02.2018ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் இணையதள நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 30.08.2018ம் தேதியிட்ட TN 36 AM 0140 வாகனத்தின் பதிவு சான்றிதழ் இணையதள நகல் ம.சா.ஆ.5 ஆகவும், 22.08.2012ம் தேதியிட்ட TN 37 BY 7879 வாகனத்தின் பதிவு சான்றிதழ் இணையதள நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 07.09.2019 முதல் 06.09.2020ம் தேதி வரை TN 37 BY 7879 வாகனத்தின் காப்பீட்டு சான்று இணையதள நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 29.11.2019ம் தேதியிட்ட TN 36 AM 0140 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 29.11.2019ம் தேதியிட்ட TN 37 BY 7879வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.9 ஆகவும், தியாகு மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ.10 ஆகவும், மருத்துவபில்கள் ரூ.11,425/–

(எண்ணிக்கை 8) அசல் ம.சா.ஆ.11 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.12 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.